1969 மார்ச் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனிமேல் அவ்வாறு ஏற்படாமல் கவனித்துக்கொள்கிறேன்.

### 5. அறிவிப்புகள்.

#### (அ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான கடைசித்தேதிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து அறிவிப்புகள்.

மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கு ஏற்கனவே குறிப்பிட்ட கடைசி தேதிகளை மாற்றி, கீழ்க்கண்டபடி கொடுக்கலாம் என்று அறிவிக்கிறேன்.

மானியக் கோரிக்கை எண்கள் 22, 23, 29, 20, 40, 13, 25, 1, 4, 31, 32, 36, 37, 45, 47, 12 — 5—3—1969-ம் தேதி பிற்பகல் 3 மணிக்குள்; ஏனைய மானியக் கோரிக்கைகள்: 7—3—1969-ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்குள்.

#### (ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆளுநர் அவர்களுக்கு நன்றியுரை அளிக்கும் தீர்மானம் இப்பேரவையில் 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் தேதி நிறைவேற்றப்பட்டதைக் குறித்து அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி எனக்கு வரப்பெற்றதைத் தெரிவிக்கிறேன் :—

"நான் சட்டப் பேரவையின் கூட்டத்தை ஆரம்பித்து நிகழ்த்திய உரைக்கென சட்டப்பேரவை அனுப்பியுள்ள நன்றியறிவிப்புத் தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டதில் மனநிறைவு எய்துகிறேன்."

#### (இ) பேரவை அலுவல் நிகழ்ச்சி விபரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட விவரப்படி பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

#### (ஈ) அண்ணாமலை பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்காக (Annamalai Uniuersity Senate) மூவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது, மூன்று என்பதால், திரு. எஸ். இராமச்சந்திரன், திரு. ஆ. கோவிந்தராசன், திரு. கோ. பூவராகன் ஆகிய மூன்று வேட்பாளர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

### 6. அரசினர் மசோதா.

#### தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து அரசினர் மசோதா, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு—நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு—நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.